இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 05-08-2024

# கலைஞரின் சட்டமும் வரலாற்றுத் தீர்ப்பும்

**அருந்ததியர் மக்களுக்கு உள் ஒதுக்கீடு வழங்கும் தமிழ்நாடு அரசின் சட்டம் செல்லும் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை உச்சநீதிமன்றம் சொல்லி இருக்கிறது என்றால், அதன் முழுப்பெருமையும் தமிழினத் தலைவர் கலைஞரைச் சாரும். இன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சாரும். அதனால் தான் அருந்ததியர் அமைப்பினர், அனைவருமே (45 அமைப்பினர்) அண்ணா அறிவாயலம் வருகை தந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துச் சென்றுள்ளார்கள்.**

"ஒடுக்கப்பட்ட மக்களின் சமூக விடுதலைக்கான சமூக நீதியை நிலைநாட்டும் நமது திராவிட மாடல் பயணத்திற்கான மற்றுமோர் அங்கீகாரமாக இன்றைய உச்சநீதிமன்றத் தீர்ப்பு அமைந்திருக்கிறது. முறையாக குழு அமைத்து அதன் மூலம் திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு அருந்ததியர் சமுதாயத்திற்கான 3 சதவிகித உள் ஒதுக்கீட்டை தலைவர் கலைஞர் கொடுக்க, அதற்கான சட்ட முன் வடிவை பேரவையில் நான் அறிமுகம் செய்து நிறைவேற்றித் தந்தோம். இந்தச் சட்டத்தை உச்சநீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் கொண்ட அமர்வு உறுதி செய்திருப்பது பெரு மகிழ்ச்சி அளிக்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார் 'திராவிட மாடல்' முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**'எங்களது 50 ஆண்டு கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்து விட்டீர்கள்' என்ற பாராட்டுச் சொல்லுக்குப் பின்னால் அரைநூற்றாண்டு அரசியல் வரலாறு இருக்கிறது என்பதுதான் உண்மை.**

அருந்ததியர் மக்களின் மேன்மைக்காக 2008 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்கள் திட்டமிட்டார்கள். எதையும் எடுத்தேன், கவிழ்த்தேன் என்று செய்யக் கூடியவர் அல்ல முதல்வர் கலைஞர். சட்டபூர்வமான அனைத்தையும் படிப்படியாகச் செய்யத் திட்டமிட்டார். சென்னை உயர்நீதிமன்றத்தின் ஒய்வுபெற்ற நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் அவர்கள் தலைமையில் 25.3.2008 அன்று குழு அமைத்தார் முதல்வர் கலைஞர். அக்குழு, அருந்ததியர் மக்களுக்கு தனிக் கவனம் தேவை, அவர்கள் உரிய விகிதாச்சாரத்தை பெற முடியாதவர்களாக இருக்கிறார்கள் என்று அக்குழு பரிந்துரைத்தது. அருந்ததியர் மக்களுக்கு சிறப்புச் சலுகை தர வேண்டும் என்று அக்குழு பரிந்துரைத்தது.

பட்டியலின ஒதுக்கீடாக இருக்கும் 18 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் இருந்து 3 விழுக்காடு அருந்ததியர்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்குவதற்காக 27.11.2008 அன்று கூடிய தமிழ்நாடு அமைச்சரவை முடிவு செய்தது. அந்தக் காலக் கட்டத்தில் முதுகு வலி காரணமாக ஒரு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு மருத்துவமனையில் இருந்தார் முதலமைச்சர் கலைஞர். அந்த சூழலில் கலைஞரின் வார்ப்பாக அப்போதைய உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள், அருந்ததியினருக்கு 3 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் சட்ட முன்வடிவை பேரவையில் 26.2.2009 அன்று அறிமுகம் செய்து நிறைவேற்றினார். 29.4.2009 இல் இது தொடர்பான விதிகள் உருவாக்கப்பட்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இன்றைக்கு அருந்ததியர் மக்கள் அடைந்துள்ள உயரம் என்பது மிக மிக அதிகம் ஆகும்.

உள் ஒதுக்கீடு வழங்கும் சட்டத்துக்கு எதிராகச் சிலர் வழக்கு தொடுத்திருந்தார்கள். தமிழ்நாடு அரசின் அருந்ததியர் உள் ஒதுக்கீடு சட்டம் செல்லும் என்று 2020 ஆம் ஆண்டே உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துவிட்டது.

இப்போது தீர்ப்பு வந்துள்ள வழக்கானது ஆந்திர மாநிலம் தொடர்புடையது. அந்த மாநிலத்தில் உள் ஒதுக்கீடு வழங்கியது தொடர்பாக ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வு, 'அதைச் செல்லாது' என்று 2015 ஆம் ஆண்டு தீர்ப்பு அளித்திருந்தது. இந்த வழக்கில் இன்றைய தமிழ்நாடு அரசு தன்னை இணைத்துக் கொண்டு வாதங்களை வைத்தது. 'உள் ஒதுக்கீடு தேவை' என வலிமையாக வாதிட்டது. இந்த வழக்கை ஏழு நீதிபதிகள் அமர்வு விசாரித்து, 'செல்லும்' என்று தீர்ப்பளித்துள்ளது. இதன் மூலமாக தமிழ்நாடு அரசின் சட்டமும் செல்லும் என்று உறுதி அளிக்கப்பட்டுள்ளது.

உள் ஒதுக்கீடுக்கு மட்டுமல்ல, சமூகநீதியை வலிமைப்படுத்துவதாக இந்த தீர்ப்பு அமைந்துள்ளது. **"பட்டியலின, பழங்குடியினருக்கான உள் ஒதுக்கீடு அளிப்பது அரசமைப்புச் சாசனத்தின் 15,16,341 ஆகிய பிரிவுக்கு எதிரானது அல்ல. அரசமைப்பு சாசனத்தின் பாகுபாட்டை தடுக்கும் பிரிவும், வேலைவாய்ப்பில் சம வாய்ப்பை அளிக்கும் பிரிவும் பட்டியலின, பழங்குடியினருக்கான உள் ஒதுக்கீட்டை மாநிலங்கள் அளிப்பதற்கு தடையாக இல்லை. பட்டியலின பழங்குடியினர் பிரிவிலுள்ள பின் தங்கிய சமூகத்தினருக்கு உள் ஒதுக்கீட்டை மாநில அரசுகள் வழங்க முடியும். அப்படி வழங்கும் போது, அந்த சமூகத்துக்கு போதுமான பிரதிநிதித்துவம் இல்லை என்ற தரவுகள் நியாயப்படுத்தும் வகையில் அமைய வேண்டும்"** என்று ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வில் ஆறு நீதிபதிகள் தீர்ப்பளித்துள்ளார்கள்.

சமூக துணை வகைப்படுத்துதல் மேற்கொண்டு உள் இடஒதுக்கீடு வழங்க மாநிலங்களுக்கு அரசமைப்பு அதிகாரம் உண்டு என்று சொல்வதன் மூலமாக மாநில உரிமையும் நிலை நாட்டப்பட்டுள்ளது.

**இது அருந்ததியர் இனத்துக்கு கிடைத்த வெற்றி. சமூக நீதிக்கு கிடைத்த வெற்றி. மாநில உரிமைகளுக்கு கிடைத்த வெற்றி.மொத்தத்தில் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனைக்கு கிடைத்த வெற்றி இது. 'திராவிட மாடல்' முதலமைச்சருக்கு கிடைத்த வெற்றி.**





நேற்று (04.08.2024) சென்னை, பல்லவன் இல்லம், மாநகர் போக்குவரத்துக் கழக மத்திய பணிமனையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 66.15 கோடி ரூபாய் மதிப்பிலான 100 புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்ட பேருந்துகளை, பொது மக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், இந்து சமயம் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி,மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இணை மேலாண் இயக்குநர் செ.நடராஜன், தொ.மு.ச. பேரவை பொருளாளர் கி.நடராசன், உயர் அலுவலர்கள், தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# நெல்லை மாநகராட்சி மேயர் வேட்பாளர் கிட்டு (எ) ராமகிருஷ்ணன்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - தங்கம் தென்னரசு அறிவிப்பு!

நெல்லை.ஆக.5

நெல்லை மாநகராட்சி மேயர் வேட்பாளராக கிட்டு என்ற ராமகிருஷ்ணனை மாமன்ற உறுப்பினர்களுடனான கூட்டத்திற்கு பிறகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைதுறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் அறிவித்தனர்.

நெல்லை மாநகராட்சி மேயராக இருந்த பி.எம்.சரவணன் கடந்த ஜீலை 3 ம் தேதி தனது பதவியை ராஜினாமா செய்தார். சொந்த காரணங்களுக்காக அவர் தனது பதவியை ராஜினாமா செய்த நிலையில் மாநகராட்சி பொறுப்பு மேயராக துணை மேயர் கே.ஆர்.ராஜு செயல்பட்டு வந்தார்.இந்த நிலையில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் காலியாக உள்ள திருநெல்வேலி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் தேர்வு நடத்துவதற்கான தேர்தலை அறிவித்தது அதன்படி ஆகஸ்ட் 5 ம் தேதி நெல்லை மாநகராட்சிக்கும்,6 ம் தேதி கோவை மாநகராட்சிக்கும் மேயர் மறைமுக தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

நெல்லை மாநகராட்சியில் 55 வார்டுகள் உள்ள நிலையில் இதில் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணிக்கு 51 உறுப்பினர்கள் உள்ளனர்.இதில் கழக உறுப்பினர்களாக 44 பேர் உள்ளனர்.இந்த நிலையில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே. என்.நேரு,நிதி மற்றும் மனிதவள தங்கம் தென்னரசு ஆகியோர் தலைமையில் மாமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நெல்லை வண்ணார்பேட்டையில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.கட்சித் தலைமை கிட்டு என்ற ராமகிருஷ்ணனை வேட்பாளராக அறிவித்துள்ளது, மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அவருக்கு ஆதரவு தர வேண்டும்.என கூட்டத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு, தங்கம் தென்னரசு கேட்டுக் கொண்டனர்.

அதன் பின்னர் அமைச்சர்கள் கே.என்.நேரு, தங்கம் தென்னரசு ஆகியோர் செய்தியாளர்களிடம் நெல்லை மாநகராட்சி மேயர் வேட்பாளராக கிட்டு என்ற ராமகிருஷ்ணன் அறிவிக்கப்படுவதாக தெரிவித்தனர்.

கிட்டு என்ற ராமகிருஷ்ணன் 40 ஆண்டுகளுக்கு மேலாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினராக உள்ளார். 25 வது வார்டு மாமன்ற உறுப்பினராக உள்ள அவர் மாமன்றத்திற்கு இரண்டாம் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஐந்து முறை திராவிட முன்னேற்றக் கழகத்தின் வட்டக் கழக செயலாளராக பணியாற்றி வந்தார். தற்போது மேயர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு பெரும்பான்மை இருக்கும் நிலையில் அவர் மேயராக வெற்றி பெறுவது உறுதியாகி உள்ளது.

இந்நிகழ்வின்போது நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப், மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன், மேயர் (பொறுப்பு) கே.ஆர்.ராஜு உள்பட கழக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

### தமிழ்நாட்டில் சாரண - சாரணியர் இயக்கத்தின்

# சர்வதேச அளவிலான வைர விழாக் கொண்டாட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தகவல்!

*சென்னை, அக. 5-*

*தமிழ்நாட்டில் சாரண சாரணியர் இயக்கத்தின் சர்வதேச அளவிலான வைர விழா கொண்டாட்டங்கள் நடைபெறும் என பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.*

*நேற்று முன்தினம் (03.08.2024) சென்னை ராஜா அண்ணாமலைபுரத்தில் நடைபெற்ற பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் மாநில பொதுக் குழு கூட்டம் நடைபெற்றது. இந்த பொதுக் குழு கூட்டத்திற்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தலைமை வகித்தார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி நிகழ்ச்சியில் பேசும் போது ஒரு இக்கத்தின் இதயமாக திகழ்வது அந்த இயக்கத்தின் பொதுக் குழு தான். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின் சாரண சாரணியர் இயக்கங்களை வலுப்பெறச் செய்யும் நமது முன்னெடுப்புகள் இளைய சமுதயாத்தினரிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இது ஒரு முக்கியமான திட்டக் கூறு ஆகும். சாரண இயக்கத்தின் மீது தமிழக முதல்வர் அவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார். பாரத சாரண சாரணிய இயக்கத்தின் பொன்விழா கொண்டாட்டங்களில் தமிழக முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். அதே போல் பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழாவில் நமது தமிழக முதல்வர் அவர்கள் பங்கேற்பார்கள். முதற்கட்டமாக இந்த வைர விழா நடத்துவதற்கு தமிழக முதல்வர் அவர்கள் 10 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்.*

*இந்த வைரவிழா நடத்துவதற்கான இடம் தயாராக உள்ளது. இந்த விழாவில் பற்கேற்க 38 நாடுகளுக்கு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. அந்த நாடுகளின் ஆர்வம் சிறப்பாக உள்ளது. இதை மனதில் வைத்துக் கொண்டு மிகப்பெரிய வெற்றி விழாவாக கொண்டாட உள்ளோம். இந்த வைர விழா ஒட்டுமொத்த தமிழகத்தின் பெருமையை உலக நாடுகளுக்கு உணர்த்தும் விழாவாக நடத்தும் மிகப்பெரிய வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொண்டு நமது இளயசமுதாயத்திற்கு மேலும் சாரண சாரணிய இயக்கத்தின் மீது ஆர்வமூட்ட முடியும்.*

*மாணவர்கள் சாரண சாணியர் இயக்க முகாம்களில் பற்கேற்று சேவை மனப்பான்மையுடன் செயலாற்றும்போது, அவர்களிடம் ஒற்றுமை உணர்வும், நல் பண்புகளும் வளரும்.*

*பள்ளிக் கல்வித்துறை சார்பில் தமிழகத்தில் உள்ள 138 தொகுதிகளுக்கு சென்று பல்வேறு ஆய்வு பணிகளை மேற்கொண்டுள்ளேன். செல்லும் இடங்களில் அங்கு செயல்படும் சாரண சாரணியர் இயக்க செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்து வருகிறேன்.*

*இந்த சாரண சாரணியர் வைர விழாவில் பங்கேற்கும் சாரண சாரணிய மாணவர்கள் குறித்து அருகில் உள்ளவர்கள் பெருமையாக பேசுவார்கள். மேலும் நாமும் இந்த இயக்கத்தில் இணைய வேண்டும் என்ற ஆர்வம் அவர்கள் மனதில் ஏற்படும். இந்த வைரவிழாவில் சுமார் 12 இலட்சம் சாரண சாரணியர் பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும். இனி வரும் காலத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் சாரண சாரணிய மாநில ஆணையத்தின் தலைவராக இருக்கும் வகையில் சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும்.*

*தமிழகத்தில் இந்து சமய அறநிலையத்துறை தங்களுக்கு சொந்த நிலங்களை பாதுகாத்து வைத்துள்ளது போல், சாரண இயக்கத்திற்கு சொந்தமான நிலங்களை பாதுகாத்து வைக்க அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். என்றார் அமைச்சர்.*



கருஞ்சட்டை பதிப்பகம் சார்பில் ப.திருமாவேலன் எழுதிய 'கலைஞரின் பெரியார் நாடு' எனும் நூல் வெளியீட்டு விழா பேராசிரியர் சுப. வீரபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நூலை வெளியிட மாநில திட்டக் குழு துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன் நூலை பெற்றுக் கொண்டார். நூலாசிரியர் ப.திருமாவேலன் ஏற்புரை வழங்கினார். இதில் கருஞ்சட்டை பதிப்பகம் உரிமையாளர் பெல் ராஜன், பதிப்பாசிரியர் இக்லாஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்